# முரசொலி மாறன் நினைவு நாள்! கழகத்தினர் அஞ்சலி!



முரசொலி மாறன் அவர்களின் 22 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 22ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் கலைஞர் இல்லத்தில் பிறந்த கலைஞரின் மனசாட்சியாக விளங்கிய, முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முரசொலிமாறன் சிலைக்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் முன்னாள் அமைச்சர் உமதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல்.மேகநாதன், க.இராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் சோ.பா. மலர்வண்ணன், மகாகுமார், ஆதாமஸ் ஆல்வாஎடிசன், பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் க.சத்தியமூர்த்தி, ஒன்றிய அவைத் தலைவர் வை.சண்முகசுந்தரம், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் பி. தியாகராஜன், செந்தில், எஸ்.செல்வா, வி.எம்.கே.பாலாஜி மற்றும் பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சியாக வாழ்ந்த முரசொலி மாறன் அவர்களின் 22வது நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட கழக அலுவலகம், முத்தமிழறிஞர் கலைஞர் வளாகத்தில் முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் முன்னிலையில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கிய ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறனின் 22 வது நினைவு நாளை முன்னிட்டு வடகோவை கிராஸ்கட் சாலையில் அமைந்துள்ள கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்டக் கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 22வது நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்ட கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆலோசனையின் படி திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன் தலைமையில் முரசொலி மாறன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாநகராட்சி, வகுரம்பட்டி பகுதியில் உள்ள இந்திரா நகரில் கல்கி மகளிர் சுய உதவி குழுவினர் மூலம் நடத்தப்பட்டு வரும் பகுதி நேர நியாய விலைக் கடையை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, புதிய நியாய விலைக் கடையைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் கலாநிதி, துணைமேயர் பூபதி, நாமக்கல் தெற்கு நகர கழகச் செயலாளர் ராணா ஆனந்த், ஒன்றிய செயலாளர் பழனிவேலு, பொருளாளர் இந்திரா நகர் கணேசன் மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பென்னாகரம் - ஏரியூர் - ஆரல்குந்தி மோ.ராஜமுத்துவின் புதிய கட்டிடம்!

## பி.என்.பி.இன்பசேகரன் திறந்து வைத்தார்!

தருமபுரி, நவ. 25 -

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் சட்ட மன்ற தொகுதியில் ஏரியூர் ஒன்றியம், பத்ர அள்ளி ஊராட்சி, ஆரல்குந்தி கிளைக் கழக பொருளாளர் மோ.ராஜமுத்து சாலம்மாள் சிவக்குமார் , சிவா அவர்களால் புதியதாக கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை தருமபுரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் பென்னாகரம் சட்ட மன்ற உறுப்பினருமான, கழக மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் , பி.என்.பி.இன்பசேகரன், B தலைமையேற்று கட்டிடத்தை திறந்து வைத்தார் .

இதில் தருமபுரி மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளரும் மாவட்டக் கழகப் பிரதிநிதி ஆரல்குந்தி ஆசி.தனபாலன், அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார்.

உடன் ஏரியூர் ஒன்றிய திமுக செயலாளர் என். செல்வராஜ், பென்னாகரம் ஒன்றிய முன்னாள் திமுக செயலாளர் மடம் க.முருகேசன், தருமபுரி மாவட்ட மருத்துவரணி, லோட்டஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி உரிமையாளர் சன் மினரல் வாட்டர் தொழிலதிபர் மருத்துவர் பி.என்.பி.ராஜசேகரன், தருமபுரி மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பி.என்.பி.மு.மோகனா முனியப்பன் ஆசிரியர் ,

பத்ர அள்ளி ஊராட்சி கழக மூத்த முன்னோடி ஆரல்குந்தி கடைக்கார ஏ.கே.கிருஷ்ணன், முன்னாள் கிளைக் கழகச் செயலாளர் எ.எம்.சின்னையன்,

பென்னாகரம் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் எம்.பெரியண்ணன், ஆரல்குந்தி கிளைக் கழக அவைத் தலைவர் ஆசிரியர் மாணிக்கம் , ஏரியூர் ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு அமைப்பாளர் ஸ்ரீ கடவுள் கன்சல்டிங் உரிமையாளர் ஏ.கே.சி.வைத்தீஸ்வரன், ஏரியூர் ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எ.பெருமாள், ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் பே.சின்னசாமி, ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் ரா.குமார்,

ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் பொ. கூத்தன், சி.வக்குமார், செ.மணிகண்டன், ஆசி.மாதேஸ், ஏ.கே.மாது, சிதம்பரம், எ.கே.பி.முத்தரசன் , எ.கே.பி.சரவணன் , அண்ணா நகர் கிளைக் கழக அவைத் தலைவர் தொழிலதிபர் அ.பெருமாள், செங்கானூர் ராஜி, சேலம் ஓட்டல் வினு ஆசிரியர் என்.சிதம்பரம், பே.சண்முகம், அ.கருப்பணன், கு.சிதம்பரம், பெருமாள், கிளைக் கழகச் செயலாளர்கள் ஏ.கே.பாலகிருஷ்ணன், அண்ணா நகர் மந்திரி, புளியம் பள்ளத்தூர் எம்.தங்கமணி,

புதுக்காடு த.சேவி, குழிக்காடு பெ. செலம்பன், தங்கம் , ஏரியூர் ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் பே.சின்னசாமி, கிளைக் கழகச் துணைச் செயலாளர்கள், பிரியா சின்னசாமி , ச.கணபதி, ச.மணி, ஆராம்பு மாது , பெ.மாதையன், ஏ.கே.சி. செல்வராணி, மா.பழனியம்மாள், முன்னாள் வார்டு உறுப்பினர் செல்வாம்மாள், மகளிர் அணி துணை அமைப்பாளர் கு.நிஜாந்தினி,

தகவல் தொழில்நுட்பம் மா.அசோக்குமார், தமிழ் நாடு மின்சார வாரியம் ஏரியூர் மா.உத்தராசன், ஒன்றிய மீனவர் அணி அமைப்பாளர் கோ.சிவக்குமார் குழிக்காடு கிளைக் கழக துணைச் செயலாளர்கள் கோ.சிவக்குமார் அனிதா மாயக்கண்ணன் , அவைத் தலைவர் மயில்வேல் , ஆரல்குந்தி தகவல் தொழில்நுட்பம் அணி அ. தினேஷ்குமார் மா.மாயக்கண்ணன் வை. செல்வன், வை.குமார் ,கொ.ரவிச்சந்திரன், கொ.அம்மாசி, ராமகிருஷ்ணன் , பழனிசாமி , பழனி, வெங்கடாசலம் , சுந்தரன் ,சீரங்கன் ,சீ. காவேரி, வெ.ரவிச்சந்திரன், தங்கராஜ், முனுசாமி,மணி, அர்த்தனாரி ,மதியழகன், புளியம் பள்ளத்தூர் மு. பெருமாள், பெ.அம்மாசி, மா.சீனிவாசன், கு ஞ்சாப்பன், சின்னா கவுண்டர், சி.மாணிக்கம், ரா.சிவசக்தி, பெ.நடராஜன், அ.பெருமாள் ஓட்டுனர் ஷ்மெயில்பாஜா, பால்ராஜ், சிவமணி , அர்த்தநாரி உள்ளிட்ட ஏராளமான கழக உடன்பிறப்புகள் உடனிருந்து சிறப்பித்தனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். நிகழ்வில் அந்தியூர் சிறப்பு நிலை பேரூராட்சி மன்ற தலைவர் எம்.பாண்டியம்மாள், துணைத் தலைவர் பழனிச்சாமி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் யாஸ்மின் தாஜ், கவிதா, கௌரி ஈஸ்வரமூர்த்தி,சேகர், அந்தியூர் பேரூர் கழக துணைச் செயலாளர் காளியப்பன், செல்வன், சையது முஸ்தபா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நெருப்புமேடு து. முத்து

**நவம்பர் 25 (2015)**



**இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**சைதை பகுதியில் வட்ட அவைத்தலைவர், துணைச் செயலாளராக தொடர்ந்து பொறுப்பில் இருந்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், குடிநீர் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 58 நாட்கள் தலைவர் கலைஞர் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**